ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

டிசம்பர் 2016

வேணு 22; கானம் 5

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை

தனி பிரதி Rs 15/-

ஆண்டு சந்தா Rs 180/-



Delivered by India Post
www.indiapost.gov.in

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME



ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரத்தன்று, 31 Oct 2016



# மதுரமுரளி
வேணு 22 கானம் 5

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

## பொருளடக்கம்


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் - 249 | 5 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 9 |
| மனம் என்னும் பேய் | 10 |
| ப்ரேமிக பவனம் உதயம் | 11 |
| கச்சியில் ஆனி கருட சேவை | 15 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 18 |
| Clean-Up Day 2017 | 20 |
| அப்ரமேயம் | 27 |
| சரியாக தீர்மானித்தல் | 30 |
| பாரம்பரிய பொக்கிஷங்கள் | 34 |
| சைதன்ய மஹாப்ரபு | 36 |
| படித்ததில் பிடித்தது | 38 |
| சனாதன புதிர் | 40 |


<u>முன் அட்டை:</u>
கார்த்திகை ஏகாதசி
<u>பின் அட்டை:</u>
விட்டலாபுரம்



# கண்ணனே சரண்

பிஞ்சு நடையும் கொஞ்சும் மொழியும்
கெஞ்சும் பார்வையும் விஞ்சும் அழகும் பொழிய
நஞ்சு அளித்தவளுக்கு வீடு அளித்தவன்
வஞ்சி கோபி முன் நின்று ஒருகை
வெண்ணைக்காக ஆடுதல் கண்டீர்!
நெஞ்சே அஞ்சுதல் தவிர்! தஞ்சமடை!
அஞ்சனாவண்ணா! நின் கழல்
சரண்! சரண்! என்று கூவு!

- ஸ்ரீமதி உமாலக்ஷ்மி

ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள், மதுரபுரி ஆஸ்ரமத்தில், சத்சங்கத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், நாமகீர்த்தனத்தின் பெருமை, பக்தி மார்க்கத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு அவதரித்து வந்துள்ள மஹான்களின் சங்கல்பத்தின் வலிமை போன்ற விஷயங்களைப் பற்றி எங்களிடம் உணர்ச்சி பூர்வமாக சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்படி சொல்லும்பொழுது, ஒரு புன்முறுவலுடன், "நம் ப்ரேமிகவரதனின் திவ்ய சங்கல்பம் என்ன தெரியுமா? வெகு விரைவில் உலகம் முழுவதும் பகவன் நாமா எதிரொலிக்க வேண்டும் என்பதுதான். 2000 ஆண்டு தாண்டும்பொழுதே, இந்த மஹாமந்திரத்தை, நான் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு இல்லத்திலும் சொல்லி, அவர்களுக்கு பல நன்மைகள் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பகவன் நாமம் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைய வேண்டும்" என்றார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த எங்களுக்கு மாபெரும் வியப்பு ஒருபக்கம். மற்றோருபக்கம், நமது ஆஸ்ரம சகோதரர்களில் ஒருவர், '2000 ஆண்டு வருவதற்கு சில வருடங்கள்தான் இருக்கிறது. அதற்குள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று இந்த மஹாமந்திரத்தை எப்படி சொல்லமுடியும்' என்று கணக்கிட கூட ஆரம்பித்துவிட்டார்.

நம் புத்திக்கு ஒரு எல்லை உண்டு. அதைக் கொண்டு, 'எப்படி முடியும்?' என யோசித்துப் பார்த்தால் இது எப்படி சாத்தியமாகும் என்று தோன்றும். ஆனால், பகவானுடையதும் குருநாதருடையதும் ஆன சங்கல்பம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டதல்லவா? உலக நன்மைக்காக அவர்கள் செய்ய வந்த காரியம் எப்படியும் நடந்தே தீரும் என்பதை அநேக மஹாத்மாக்களின் திவ்ய சரித்ரங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு சமயம், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஒரு பொது நிகழ்ச்சிக்கு சென்றிருந்தார்கள். அப்பொழுது, தமிழ்நாட்டில் உள்ள முக்யமான தொலைக்காட்சி சேனல் நிறுவனர் கலந்துகொண்டார். இறை பக்தியும் நல்லுள்ளமும் படைத்த அந்த அருமையான மனிதர், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம்,



# மதுரமான மஹனீயர்

~ Dr ஆ பாக்யநாதன்

‘உங்களது அருமையான அருளுரைகள் எங்கள் தொலைக்காட்சியில் மூலம் எல்லோரையும் சென்றடைய வேண்டும். நீங்கள் இதற்கு இசைய வேண்டும்’ என்று வேண்டிக்கொண்டார். ஸ்ரீ ஸ்வாமிஜியும் ஏற்றுக்கொண்டார். அந்த தொலைக்காட்சி நிறுவனமே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளை ஒளிப்பதிவு செய்ய, சரியாக 2000 ஆண்டில் ஒளிபரப்பும் செய்யப்பட்டது.

அதில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தமது உரைகளை ஆரம்பிக்கும்பொழுது, ‘ஹரே ராம...’ மஹாமந்திரத்தை 3 முறை சொல்லிவிட்டுதான் ஆரம்பிப்பார்கள். இதை கேட்ட பிறகுதான், எங்கள் மனதில் சில வருடங்களாக ஒலித்துக் கொண்டிருந்த அந்த கேள்விக்கான விடை கிடைத்தாற் போலிருந்தது. எங்களது ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. நாமாவை வீடு வீடாக தான் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் விருப்பத்தை நமது ப்ரேமிகவரதன் எவ்வளவு அழகாக பூர்த்திசெய்துவிட்டான் என்று மிகவும் மகிழ்ந்தோம். நாங்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் எங்கள் மனமகிழ்ச்சியை தெரிவித்தபோது, எங்கள் மனதில் கேள்வி உதித்த அன்று புன்முறுவல் பூத்தாற் போலவே மறுபடியும் ஒரு புன்முறுவல் மட்டுமே பூத்து எங்களை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

ஒவ்வொரு வீட்டிலும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரையும் நாமாவும் சென்றடைந்தது. அந்த தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கான ஒளிப்பதிவு நடந்த சமயத்தில்தான் ராஜா என்னும் அன்பர் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்ய வந்தார். அவர் புதுகோட்டையைச் சேர்ந்தவர். FILM INSTITUTEல் படித்து பட்டம் பெற்றவர். அப்பொழுது ஒளிப்பதிவுதுறையில் வெற்றிகரமாக கால் வைக்க துவங்கி இருந்தார். அவருக்கு ஆன்மீகம், குருநாதர், ஸத்ஸங்கம் இவற்றில் ஆர்வம் உண்டு. இந்த அருளுரைகள் RECORDING நடந்தபோது, CAMERA தமது துறை என்பதால், ராஜாவும் மிகவும் ஆர்வத்துடன் இதில் கலந்துகொண்டு தன்னாலான சேவை செய்ய ஆரம்பித்தார். படிப்படியாக ஸ்ரீஸ்வாமிஜியினால் ஈர்க்கப்பட்டு, முற்றிலுமாக, குருநாதர் என்னும் நிழலில் சரண் புகுந்தார். ஸ்ரீஸ்வாமிஜி மீது ஈடுபாடுடனும் பக்தியுடனும் அத்யந்த பக்தராக இருந்து, ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகளை, சத்சங்க நிகழ்ச்சிகளை படம்பிடிப்பது என்ற சேவையை தொடர்ந்து செய்து வருகிறார் ராஜா.

அவருக்கு ஒரு அருமையான குடும்பம். அவரது மனைவி பெயர் விஜி. அவரும் ஸ்ரீ ஸ்வாமிஜி மீது பக்தி கொண்டவர். மாதுரீஸகீ, ஸ்ரீ பிரேமிகவரதன் என்றால் அவ்வளவு உயிர். விஜி கர்ப்பமாகியிருந்த சமயம், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ராஜா — விஜி தம்பதியினருக்கு

பிரசாதம் வழங்கும்பொழுது, ‘உங்களுக்கு பெண் குழந்தை பிறக்கும்’ என்று அருளினார். அதன்படியே அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. ஜான்ஹவி என்ற பெயரும் ஸ்ரீஸ்வாமிஜி வைத்தார்கள்.

சமீபத்தில், நவராத்திரி சமயத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பூஜா மூர்த்தியான ‘ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன்’ சென்னை ப்ரேமிகபவனத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், மாதுரீஸகீயையும் ப்ரேமிகவரதனையும் ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து ராதிகா ஸதகம் கீர்த்தனங்கள் பாடி உத்சவம் கொண்டினார்கள். தினமும் பத்து பாடல்கள் பாடுவது வழக்கம்.

விஜிக்கு ப்ரேமிகவரதன் என்றால் கொள்ளை ஆசை. அவர்கள் இருக்கும் இடமோ ப்ரேமிகபவனம் மிக அருகில். ஓடி ஓடி வந்து சத்சங்கத்தில் கலந்துகொள்வார். ஸ்வாமி வந்திருக்கின்றார் எனத் தெரிந்த நாள் முதலாக, எல்லா நாட்களிலும் ஸத்ஸங்கத்தில் கலந்து கொள்ளவேண்டும், ராதிகா ஸதகம் பாடவேண்டும் என இருந்தார். ஆனால், குழந்தைக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. அதனால் ஸத்ஸங்கத்தில் சில நாட்கள் கலந்துகொள்ள முடியாமல் போனது.

ராஜாவிற்கும், விஜிக்கும் ஜான்ஹவியைத் தொடர்ந்து, தங்களுக்கு இரண்டாவது குழந்தை வேண்டும் என்ற விருப்பம் இருந்து வந்தது. அதற்காக பிரார்த்தனையும் செய்து வந்தனர். முதல் குழந்தை கருவுற்றபோது எப்படி தாங்கள் சொல்லாமலேயே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், உங்களுக்கு பெண் குழந்தை பிறக்கும் என்று பிரசாதம் தந்து அருளினாரோ, இந்த முறையும் ஸ்ரீ ஸ்வாமிஜியே தங்களுக்கு சொல்லவேண்டும் என்று விஜி தனக்குள் நினைத்திருந்தாள்.

நவராத்திரி உத்சவ பூர்த்தி தினமும் நெருங்கியது. கடைசிநாளுக்கு முன்பாகவே, அனைத்துப் பாடல்களும் பாடி முடித்துவிட்டபடியினால், ஒரு நாள் முன்பாகவே ஸ்ரீ ப்ரேமிகவரதன் ஆஸ்ரமம் கிளம்புவதாக ஆகிவிட்டது. மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் ப்ரேமிகபவனத்திருந்து மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு சென்றுவிடுவானே என்ற ஒரு பெரிய மனவருத்தம் விஜியைத் தொற்றிக்கொண்டது. அன்று இரவு ப்ரேமிகவரதனை நினைத்து அழுதுகொண்டு அப்படியே உறங்கிவிட்டாள். அன்றிரவு விஜிக்கு ஒரு கனவு வந்தது.

அந்த கனவில், “ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், வரிசையாக வந்துகொண்டிருந்த அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஸ்ரீ ப்ரேமிகவரதனின் சந்தன ப்ரசாதம் கொடுத்துக்கொண்டிருந்தார். வரிசையில் விஜி சென்றபோது விஜிக்கு சந்தன பிரசாதம் கொடுக்கவில்லை. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், விஜியிடம், ‘நீ ஏன் இவ்வளவு

கவலையோடு இருக்கிறாய்? நீ வருத்தப்படக்கூடாது. நீ வருத்தப்பட்டால் உன் வயிற்றில் வளரும் அழகிய கன்னுக்குட்டியும் வருத்தப்படும். சந்தோஷமாக் இரு‘ என்று சொல்லிக்கொண்டே சந்தனத்தைக் கொடுத்தார்கள். அந்த சந்தனத்தை இரு கன்னங்களிலும் இட்டுக்கொள்ளச் சொன்னார்.

மறுநிமிடம், கண் விழித்த விஜிக்கு அது ஒரு கனவு என்று அப்பொழுதுதான் புரிந்தது. பொழுதும் விடிந்திருந்தது. அன்று வழக்கம்போல் ஸத்ஸங்கத்திற்குச் சென்றாள் விஜி. அன்றைய தினம் கூட்டம் அதிகமாக இருந்தது. விஜி, தூரத்திலிருந்தே குருநாதரை நமஸ்கரித்தபொழுது, அந்தக் கூட்டத்திலும் குருநாதர் ஒரு கணப்பொழுதில், தனக்கு எல்லாம் தெரியும் என்பதுபோல் விஜியைப்பார்த்து கடாக்ஷம் செய்தார்கள்.

அதற்குப்பிறகு சில நாட்கள் கழித்து, ராஜாவும் விஜியும் மருத்துவரை சந்தித்து சோதனை செய்து பார்க்கையில் விஜி கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை சொல்லவும் வேண்டுமோ!




# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

## நமக்கு நாமே ஆனந்திக்க முடியுமா ?

**ஒரு விஷயத்தை நாம் சிந்தித்துக் கொண்டு இருக்கும் பொழுது அதில் ஒரு நகைச்சுவையான விஷயம் நமக்கே தோன்றும். முதலில் அப்படி ஒரு எண்ணம் வந்தவுடன் நாமே நமக்குள் சிரித்துக் கொண்டு மகிழ்வோம். நமக்கு நாமே மனதிற்குள் ஒரு ஹாஸ்ய உணர்ச்சி ஏற்பட்டு சிரித்துக்கொள்கின்றோம். அது போல் நமக்கு நாமே ஆனந்திக்க முடியும்.**

**ஒரு சோகமான விஷயம். அதை ஒருவரிடம் தெரிவிக்க வேண்டும். அதைத் தெரிவித்தால் அவரால் தாங்க முடியுமா, அவர் மிகவும் வருத்தப்படுவாரே என்று நினைத்து நினைத்து நமக்கு நாமே துக்கப்படுகின்றோம். நமக்கு நாமே எப்படி துக்கப்படுகின்றோமோ, அதுபோல் நமக்கு நாமே ஆனந்திக்க முடியும். உண்மையை சொன்னால் இவைகள் மாறி மாறி வரும் உணர்வு. ஆனந்தமோ நம்முடைய இயல்பாக எப்பொழுதும் விளங்கி கொண்டிருக்கும் உணர்வு.**

"ஸத்குருநாதர் செய்த கருணைக்கு, அவருக்கு வந்தனம் மட்டும்தான் செய்ய முடியும் என்று தோன்றியது. அப்படி தோன்றியபோது, எத்தனை வந்தனங்கள் செய்தாலும் எத்தனைக் காலம் செய்தாலும் ஸத்குருநாதர் கருணைக்கு ஈடாகாது என்றும் தோன்றியது."

- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

- Dr ஆ பாக்யநாதன்



# மனம் என்னும் பேய்

ஒரு சமயம், கிராமம் ஒன்றிற்குச் சென்றிருந்தோம். அங்கு ஒருவருக்குப் பேய் பிடித்து விட்டதாகக் கருதி, ஒரு மந்திரவாதியை அழைத்து வந்தார்கள். அந்த மந்திரவாதி பார்ப்பதற்கே சற்று அச்சுறுத்துபவராக இருந்தார். ஒரு கையில் உடுக்கை; மற்றொரு கையில் சாட்டை. அந்த உடுக்கையை அடித்துக் கொண்டே, சாட்டையால் அடிக்க ஆரம்பித்தார். அந்த பேய் பிடித்த நபரை பார்த்து, ‘‘நீ யார் சொல்லு? நீ யார் சொல்லு? ஏன் இவனைப் பிடித்து கொண்டுள்ளாய்’’என்று மிரட்ட ஆரம்பித்தார். ஆனால், எதற்கும் அந்த பேய் அசரவில்லை. ஒரு பதிலும் கூறவில்லை. இதை ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் விவரித்தபொழுது, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ‘‘நம்மையும் மனது என்ற பேய் பிடித்துள்ளது. அது நம்மை ஆட்டி வைக்கின்றது. அதன் கையில் ஒரு பாவையாகத்தான் நாம் உள்ளோம். அந்த பூசாரியோ பேயைப் பார்த்து, நீ யார்? நீ யார்? என்று கேட்கிறார். நாமோ நம் மனதை பார்த்து, நான் யார்? நான் யார்? என்று கேட்கிறோம். மனதான பேயும், அவ்வளவு சீக்கிரத்தில் வழிக்கு வருவதாக இல்லை. ஆனாலும் விடக்கூடாது. மனதான பேயுடன் இருக்கும் வரை எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?’ என்று கூறினார்கள்.

# ப்ரேமிக பவனம் உதயம்

சென்னையில் வாழ்ந்து வந்த திருமதி.மதுரவல்லி மற்றும் திரு.குப்புசுவாமி தம்பதிகளுக்கு, 1951 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதி அன்று, மூத்தக் குழந்தையாகப் பிறந்தவர்தான் திருமதி ஜெயந்தி ஜானகிராமன் அவர்கள். 'ஜெயமணி'என்று செல்லமாக அழைக்கப்பட்டார். பிற்காலத்தில், நம் குருநாதரும் அன்புடன் இந்த பெயரால் அவரை அழைப்பதும் உண்டு. சிறு வயதிலேயே வாய்ப்பாட்டு, வீணை, தையற்கலை போன்ற கலைகளைக் கற்று, நல்ல படிப்பும் பெற்று, வீட்டு வேலைகளையும் நன்கு செய்யக் கூடிய ஒரு சிறந்த பெண்மணியாகத் திகழ்ந்தார். அருகாமையிலேயே, திருமதி பத்மாக்ஷீ மற்றும் திரு கிருஷ்ணமூர்த்தி தம்பதிகளின் குடும்பமும் வாழ்ந்து வந்தது. அவர்களது மூன்றாவது

குமாரனான திரு ஜானகிராமன் அவர்கள், I.I.Tயில் Civil Engineering படித்து விட்டு, மேற்படிப்புக்கு ஜெர்மனி நாட்டிற்குச் சென்று படித்தார். நற்குணங்கள் கொண்ட ஒரு பண்புள்ள மனிதர் திரு.ஜானகிராமன் அவர்கள். இரு குடும்பமும் பரிச்சயமான குடும்பங்களாக இருந்ததால், இருவருக்கும் பெரியோர்கள் முன்னிலையில், மார்ச் 11, 1973ஆம் வருடம் விவாகம் ஆகியது. ஆச்சர்யம் என்னவென்றால், இரு குடும்பத்திற்கும் இதுவரையில் வழக்கத்தில் இல்லாத வகையில், இவர்களின் விவாஹம் குருவாயூரில் குருவாயூரப்பன் அனுக்ரஹத்துடன் நடந்தேறியது. இது பிற்காலத்தில், இந்த தம்பதிகள் பக்தி மார்கத்தையும், பாகவத தர்மத்தையும் உபதேசிக்க வந்த நம் சத்குருநாதரின் கருணைக்குப் பாத்திரர்கள் ஆகப் போவதை, தெரிவிக்கும் வண்ணம் அமைந்தது!

ஜெயந்தி அவர்கள், I.O.B வங்கியில் அதிகாரியாக வேலை பார்த்து வந்தார். வேலையிட மாற்றம் காரணமாக, சில காலம் மும்பையில் குடித்தனம் செய்து பிறகு சென்னையில் வங்கியின் மத்திய அலுவலகத்தில் பணியாற்றி வந்தார். நேதாஜி நகரில் ஜாபர்கான்பேட்டையில் ஒரு சொந்த வீடு கட்டி கொண்டு அங்கு வசித்து வந்தார்கள். அந்த வீட்டிற்கு ‘கோகுலம்’ என்று பெயர் வைத்தனர். அந்தப் பெயர் பொருத்தமாக அமைந்தது. ஏனென்றால், இந்த இல்லத்திற்குத்தான் நம் குருநாதர் பிற்காலத்தில் வருகை தந்து, அவரது இல்லமாகவும் ஒரு கோவிலாகவும் ஆக்கிப் புனிதப்படுத்தினார். அதுதான் தற்போது ‘பிரேமிக பவனம்’ என்று அழைக்கப்படுகிறது.

ஜெயந்தி ஜானகிராமன் தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகள். மூத்த பையனுக்குப் பிரதீப் என்று பெயர். இரண்டாவது பெண் குழந்தைக்கு சங்கீதா என்று பெயர். இருவருக்கும், P.S.B.B பள்ளிக்கூடத்தில் நல்ல படிப்பும், நெய்வேலி திரு.சந்தானகோபாலன் அவர்களிடத்தில் கர்நாடக இசையும், நல்ல பழக்க வழக்கங்களையும் சொல்லிக் கொடுத்து, நல்ல குழந்தைகளாக வளர்த்து வந்தார். அவர்கள் சந்தோஷமாக குடும்பம் நடத்தி வந்தனர்.

ஜெயந்தி அவர்கள், மிகவும் சகஜமாக எல்லோரிடமும் பழகக் கூடியவர். பலவிதமான சமையல் செய்வதிலும், தையல், பின்னல், ஓவியம் போன்ற பல கலைகளிலும் கை தேர்ந்தவர். பிறருக்கு உதவும் மனப்பான்மை உடையவர். மேலும், விருந்தோம்பல்

செய்வதில் மிகவும் ப்ரியம் கொண்டவர். இது அனைத்துமே, அவர் நம் குருநாதரை தரிசனம் செய்த பிறகு, அவரது கருணையால், பகவானுக்கே அர்ப்பணம் ஆகியது. இப்படியாக, அவர் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கையில், சுமார் 39 வயது இருக்கும் போது, மகாபெரியவாளின் ‘தெய்வத்தின் குரல்’ எனும் புத்தகத்தின் முதல் பாகத்தை யதேச்சையாக படித்தார். அதை படித்ததுமே, அதில் மகாபெரியவா சொல்லி இருக்கும் விஷயங்களினால் ஈர்க்கப்பட்டு, மேலும் மேலும் எல்லா பாகங்களையும் வாங்கிப் படித்தார். அது மனதில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவே, தனக்கு ஆன்மீக பாதையில் செல்வதற்கு வழி காட்ட, ஒரு சத்குரு கிடைக்க வேண்டுமே என்று மனமுருகி இறைவனை பிரார்த்தித்து வந்தார். அந்த பிரார்த்தனை பலிக்கும் சமயமும் வந்தது.

தினமும், பேருந்தில் அலுவலகம் செல்லும்போது, தன்னுடன் பணியாற்றும் லக்ஷ்மி என்பவருடன் பேசிக்கொண்டே செல்வது வழக்கம். (இந்த லக்ஷ்மி என்பவர்தான் தற்போது பெங்களூரில் இருக்கும் திருமதி லக்ஷ்மி முரளீதரன் என்ற ஸ்வாமிஜியின் தீவிர பக்தர் ஆவார்). லக்ஷ்மி என்பவர், ஜெயந்தி அவர்களின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள பாரதிதாசன் காலனியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தார். இருவரும் நல்ல நண்பர்கள். அலுவலகம் செல்லும்போதும், வரும்போதும், ஜெயந்தி, லக்ஷ்மியிடம் தெய்வத்தின் குரலில் தான் படித்த நல்ல விஷயங்களை எல்லாம் சொல்லிச் சொல்லி சந்தோஷப்படுவார். மே மாதம் 1991 ஆம் ஆண்டு, ஒரு நாள் திடீரென விடுமுறை என அறிவிப்பு வரவே, பேருந்து நிலையத்தில் லக்ஷ்மி, ஜெயந்தியிடம், ‘நீங்கள் தினமும் மகாபெரியவாளைப் பற்றியும், அவருடைய தெய்வத்தின் குரலைப் பற்றியும் எவ்வளவு ஆசையாக பேசுகிறீர்கள்! எங்கள் கூட ஒருவர் இருக்கிறார். நாங்கள் அவரை குருஜி என்று அழைப்போம். அவர் மகாபெரியவாளின் பக்தர்தான். பெரியவாளைப்பற்றி நிறையப் பேசுவார். மேலும், அற்புதமாக ஆன்மீகத்தைப் பற்றியும் உபதேசிப்பார். விடுமுறையானதால், நீங்கள் இன்று வேண்டுமானால், அவரை தரிசிக்க வருகிறீர்களா?’ என்று கேட்டார்.

ப்ரேமை தொடரும்...

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



# கச்சியில் ஆனி கருட சேவை -5

**- ஸ்ரீ ராமானுஜம்**

நமது தேவ பெருமாள் பெரியாழ்வார் திருமொழி கேட்டவாறு பெரியாழ்வார் சன்னிதி எழுந்தருளியதை சென்ற இதழில் அனுபவித்தோம். இந்த இதழில்...

கருட சேவை முடிந்த அடுத்த நாள் காலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தமது அனுஷ்டானங்களை முடித்த பின், நேரே கோவிலுக்கு சென்றுவிட்டார்கள்! நாங்களோ அவர் வெகு தூரம் சென்ற பின்தான் அதை கவனித்தோம்!

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் புஷ்கரணி படிகளில் அமர்ந்து பகவத் சிந்தனையில் இருந்தார்கள்! மெதுவாக பின் சென்று நின்ற அடியேனைப் பார்த்து, தான் புஷ்கரிணியில் நீராடப் போவதாக கூறினார். நமது கீர்த்தனாவளி மண்டபத்தில் ஆராதனை செய்யும் ஸ்ரீஅரவிந்த், கோபிசந்தனம் முதற்கொண்டு தேவையான அனைத்தையும் கொண்டு வந்தார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் புஷ்கரிணியிலிருந்து கோவிலுக்கு உள்ளே பெருமாளை தரிசனம் செய்ய செல்லும்போது, Houston (USA) Namadwaarஐ சார்ந்த திரு ஜீவன் அவர்களின் குடும்பத்தினரும் சரியாக வந்து சேர்ந்தனர்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தமது உபன்யாசங்களில் கூறுவதுண்டு, ‘சத்சங்கத்தில் புதிது புதிதாக பக்தர்கள் வந்து சேருதல், எல்லாருக்கும் ஒரு பெரிய லாபம். எப்படி என்றால், புதிதாக வருபவர்களுக்கு பகவத் விஷயங்களை சொல்லும் சாக்கில், நாமும் பகவானையும், பகவத் விஷயத்தையும் ஸ்மரித்துக் கொள்ளலாம்’. சத்சங்கத்தில் முன்பே இருந்து வரும் நம்மை போன்றவர்களுக்கு அதை விட பெரிய லாபம், நமது ஸ்ரீஸ்வாமிஜியின் திருமுகம் மலர்ந்து பகவத் விஷயங்களை மறுபடியும் கேட்கலாமே! நமது ஸ்ரீ ஸ்வாமிஜி ஒரு பகவத் விஷயத்தை ஒரே மாதிரியாக சொல்லி நாங்கள் பார்த்ததே இல்லை!

பிரசங்காத்தாக - இந்த விஷயத்தை ஒட்டி வேறு ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது - ஒரு தொலைக்காட்சி உபன்யாசத்திற்கு ஸ்ரீரங்கம் விஷயமாக ஸ்ரீஸ்வாமிஜி ஒரு ஒளிப்பதிவு கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். 5 நிமிடம் ஆயிற்று...உபன்யாசமும் சுவையாக சென்றுகொண்டிருந்தது. அப்போது ஒளிப்பதிவாளர், கை அசைத்து, ஸ்ரீஸ்வாமிஜியை கொஞ்சம் உபன்யாசம் நிறுத்துமாறு பிரார்த்தித்துக்

கொண்டார். ஸ்ரீ ஸ்வாமிஜியும் நிறுத்தவே, அவர், ஒலிபெருக்கி (microphone) சற்றே கோளாறு செய்கிறது, தாங்கள் தயவு கூர்ந்து திரும்ப இந்த விஷயத்தை கூறியருளவேண்டும் என்று கேட்க, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அதே தலைப்பை, வேறு ஒரு புத்தம் புதிய கோணத்தைக் கொண்டு 'சட்' என்று உடனே ஆரம்பித்தார்கள்!

முன்பு கூறிய விஷயம் போலவே மிகவும் ராஸிக்யமாக இருந்தது! அற்புதமான அந்த உபன்யாசம் முடிந்ததும், அங்கு இருந்தவர்களுக்கு, இந்த ஒலிபெருக்கி திரும்ப ஏதாவது பிரச்சனையை கொடுத்திருந்தால், மற்றும் ஒரு புதிய ரசம் அனுபவிக்கும் பாக்கியம் கிடைத்திருக்குமே' என்றுதான் தோன்றியது! )

இன்று திரு ஜீவன் குடும்பத்தினர் முதன்முதலாக ஸ்ரீஸ்வாமிஜியுடன் ஸ்ரீவரதரை தரிசிக்க வந்ததால், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அழகாக கோவிலைப் பற்றியும், இந்த தேவபெருமாளிடம் ஈடுபட்ட ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சார்ய புருஷர்களைப் பற்றியும் சொல்லிக்கொண்டே வந்தார்கள்.

த்வஜஸ்தம்பம் தாண்டி, முதலில் தாயாரை தரிசனம் செய்விக்க ஸ்ரீஸ்வாமிஜி எங்கள் எல்லோரையும் அழைத்து சென்றார்கள்! அப்போது சந்நிதியில் ஆராதனம் நடந்து கொண்டிருந்ததால், திரை போடப்பட்டு இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜியை அங்கு கோவிலில் கைங்கர்யம் செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அழைத்தும், ஸ்ரீஸ்வாமிஜி queue வரிசையிலே வருவதாக சொன்னார்.

(பல முறை எங்களை திருப்பதி போன்ற திவ்யதேசங்களுக்கு சென்று பெருமாளை தரிசனம் செய்ய அனுப்பும்பொழுது, நமது சத்குருநாதர் எப்போதும் தர்ம தரிசனத்தில் சென்றுதான் தரிசனம் செய்ய வேண்டும் என்று கட்டாயமாக கூறுவார்கள்! ஸ்ரீஸ்வாமிஜியும் அவ்வாறே தரிசனம் செய்வார்கள். தெரிந்தவர்களை பிடித்து எப்படியாவது ஒரு விசேஷ தரிசனம் செய்வது போன்றவைகள் அவருக்கு அறவே உகக்காத விஷயமாகும்)

அப்போது ரசமான பல விஷயங்களை பகிர்ந்து கொண்டார்கள் ஸ்ரீஸ்வாமிஜி. காஞ்சி என்ற உடனே, நமது ஸ்வாமிஜி அவர்களுக்கு காஞ்சி மஹாபெரியவாளின் ஞாபகம் வராது இருக்குமா!!! இந்த கோவிலில் ஒரு பிள்ளையார் (துதிக்கை ஆழ்வார்) சன்னதி உள்ளது. அது எங்கு இருக்கிறது என்று முயற்சி எடுத்து தேடிபிடித்தால்தான் புலப்படும்! ஒருமுறை ஒரு சந்நியாசி காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவருக்கு தண்டம் சமர்ப்பிக்க வந்தபோது, தான் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்க, 'இந்த பெருமாள் கோவிலில் இருக்கும் பிள்ளையார் போல, இருக்கிற இடம் தெரியாமல் வாழவேண்டும்' என்று சொன்னார்களாம்.

- ஸ்ரீ வரதர் வருவார்....

கண்ணபிரான் துணை

மஹாரண்யம்

## ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

அவர்களின் அருளாசியுடன்

**சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா**

வழங்கும்





**10 ஆம் ஆண்டு**

# தெய்வ தமிழ் இசை விழா 2016

**19-12-2016 முதல் 25-12-2016 வரை**

**நேரம் – மாலை 7 மணி முதல் 9 மணி வரை**

இடம் - **மஹோதயா ஹால்,** ஜவஹர் வித்யாலயா பள்ளி வளாகம், 7வது நிழற் சாலை, அசோக் நகர், சென்னை.

***19/12/2016 - மாலை 6.45 மணிக்கு துவக்கவிழா***

*19/12/2016 - திங்கட்கிழமை*
**சுப்பிரமணிய பாரதியார் கீர்த்தனங்கள்**
சுனில் R. கார்க்யன் மற்றும் குழுவினர்

*20/12/2016 - செவ்வாய்கிழமை*
**கோபாலக்ருஷ்ண பாரதி கீர்த்தனங்கள்**
திருமதி. காயத்ரி வெங்கடராகவன் மற்றும் குழுவினர்

*21/12/2016 - புதன்கிழமை*
**நாலாயிர திவ்யப்ரபந்தம்**
திருமதி. வசுமதி தேசிகன் மற்றும் குழுவினர்

*22/12/2016 - வியாழகிழமை*
**திருப்புகழ்**
திருமதி. வரலக்ஷ்மி அனந்த்குமார் மற்றும் குழுவினர்

*23/12/2016 - வெள்ளிகிழமை*
**தேவாரம், திருவாசகம்**
செல்வி. J.B. கீர்த்தனா மற்றும் குழுவினர்

*24/12/2016 - சனிக்கிழமை*
**திருவருட்பா**
திருமதி. ராதா பார்த்தசாரதி மற்றும் குழுவினர்

*25/12/2016 - ஞாயிற்றுகிழமை*
**5 – 6 மாலை: பக்தி பாமாலை**
நூரணி சகோதரர்கள் (சிர. சிவா & சிர. ஹரி)
**7 – 9 மாலை: மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளிச் செய்த 'மதுரகீதம்' – தமிழ் கீர்த்தனங்கள்**
சத்சங்கத்தை சேர்ந்த குழந்தைகள்

**தேதி: 24/12/2016, சனிக்கிழமை**
காலை 9 மணிக்கு: **மதுரகீதம்**
பள்ளி மாணவர்களுக்கான பஜனைப் போட்டியின் முதல் சுற்று

**அனைவரும் வருக... அனுமதி இலவசம்!**

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD

மேலும் விபரங்களுக்கு:

**சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா**

பிளாட் 4/11, நேதாஜி நகர் ப்ரதான சாலை, ஜாபர்கான்பெட், சென்னை – 600 083.

போன்: +91 44 2489 5875 செல்: +91 94426 13710 Related Websites: www.namadwaar.org / www.madhuramurali.org

## பாலகர்களுக்கு ஒரு கதை

# உண்மையான வெளிச்சம்

பழ வியாபாரி ஒருவர் நேர்மையாகவும், கடினமாகவும் உழைத்து வந்தார். பிரகாஷ் என்ற பெயர் கொண்ட அவருக்கு கண் தெரியாது. கண் தெரியாததோடு அவருக்கு வயதும் ஆகி இருந்தது. ஆனாலும் தன் வீட்டிலிருந்து, தான் தினம் வியாபாரம் செய்யும் இடம் வரை தன் கையில் ஒரு கைத்தடியுடன் காலையில் விரைவாக, தனியாகவே வந்து விடுவார். அவருக்கு சாலையில் உள்ள திருப்பங்கள், அதன் தூரம், எப்பொழுது கடக்க வேண்டும், சாலையில் என்ன சப்தங்கள் வருகின்றன என்பதெல்லாம் அத்துபடி. அவரை பார்க்கையில் சிரமமே இல்லாமல் நடப்பது தெளிவாக தெரியும். அவருடன் வேலை செய்த பலருக்கும், அவர் நண்பர்களுக்கும் அவரை பார்க்கவே ஆச்சரியமாக இருக்கும். பிறரின் தயவை எதிர்பார்க்காமலேயே அவர் இப்படி தம் தொழிலை அருமையாக செய்து வந்தார்.



பழங்களை சரியாக எடுத்து வைத்து விற்பனை செய்வார். இருட்டி விட்டால் அவர் வீட்டிற்கு திரும்பி சென்றுவிடுவார். செல்லும் முன், தன் பொருட்களையும் எல்லாம் சரியாக எடுத்து வைப்பார். பழங்களை எல்லாம் சரியாக கூடைகளில் அடுக்கி, ஒழுங்காக கட்டி வைப்பார். அவர் செய்யும் ஒவ்வொரு செயலும் படு நேர்த்தியாக இருக்கும்.

இரவில் அவர் தம் கையில் ஒரு அரிக்கேன் விளக்கை பற்ற வைத்து, ஏந்தி ஒரு கையில் பிடித்து கொண்டு, மறு கையில் கைத்தடியை ஊன்றி நடந்தவாறே செல்வார். அதை பார்க்கையில் எல்லாம், அவர் நண்பர்கள் அவரை கிண்டல் செய்யாமல் இருந்தது இல்லை. ‘உனக்கோ கண் தெரியாது. இந்த விளக்கு எந்தவிதத்தில் உனக்கு பயன்படும்’ என்பார்கள்.

அப்படி சொல்லிவிட்டு, சப்தம் போட்டு சிரிப்பார்கள். இது அன்றாடம் நடக்கும். ஒருமுறை அவரது மிக நெருங்கிய தோழன் கூட இதை சொல்லி, அவரை மிகுந்த மனவருத்தம் அடைய செய்தான்.

அப்பொழுது அவர், “நண்பா! நான் எனக்காக விளக்கை ஏந்தி செல்லவில்லை. நீ சொல்வது போல், அதன் தீப ஒளி எனக்கு பயன்படாதுதான். ஆனால், என் முன்னே வருபவர்களுக்கு இது பயன்படும் அல்லவா? இருட்டில் அவர்கள் என்னை சரியாக கவனிக்காமல் வந்து என் மேல் வேகமாக மோதிவிட்டால், எனக்கும் கஷ்டம்; அவர்களுக்கும் கஷ்டம் அல்லவா? இதை தவிர்ப்பதற்காகத்தான், உன் போல என் முன்னே இருப்பவர்களின் நன்மையை உத்தேசித்தும்தான், எனக்கு கண் தெரியாது எனினும், ஒரு கையில் விளக்கை ஏந்தி கொண்டு வருகிறேன்’, என்றார்.

அதை கேட்டு பிரகாஷின் நண்பர் வாயடைத்து போனார். ப்ரகாஷின் இந்த அருமையான சொற்கள் அவர் நண்பரின் அகக்கண்களை திறந்து விட்டது!


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

Clean-Up Day 2017

குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்ட் (G.O.D India Trust) மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி நிர்வகித்து வரும் நாமத்வார்கள் மூலமாகவும் சத்சங்கங்களின் மூலமாகவும், பொதுத் தொண்டின் ஒரு பகுதியாகவும், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஆங்கில பிறந்த தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகவும், கடந்த 2011ஆம் ஆண்டு முதல், நவம்பர் மாதம் முதல் வாரத்தில் 'Clean-Up Day' என்கின்ற தூய்மை தினத்தை செயல் படுத்தி வருகின்றோம். இந்தியாவிலும் உலகின் பல நாடுகளிலும் தன்னார்வத் தொண்டர்கள் பொது மக்கள் துணையுடன் பொது இடங்களான கடற்கரை, பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், மருத்துவமனைகள், கோயில்கள், பள்ளி வளாகங்கள், சாலைகள் போன்ற பொது இடங்களை இந்நாளில் தூய்மையாக்கி விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மேற்கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியானது இந்த வருடம் நவம்பர் 13ஆம் தேதி தமிழ் நாட்டிலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் சத்சங்க அன்பர்கள் மிகவும் உற்சாகத்துடன் மேற்கொண்டனர். ஸ்ரீபெரும்பத்தூர், கலட்டிபேட்டை, திருவல்லிக்கேணி, மைலாபூர், பட்டினப்பாக்கம், அயனாவரம், சிங்கபெருமாள் கோயில், மாதவரம், கொடுங்கையூர், கண்ணதாசன் நகர், முத்தமிழ் நகர், அண்ணாநகர், பம்மல், குரோம்பேட்டை, கோவூர், விருதுநகர், தூத்துக்குடி, திருச்சி, அம்பாசமுத்திரம், கடலூர், வத்தலகுண்டு, பெரியகுளம், சிவகாசி, கோவில்பட்டி, மதுரை, வேலூர், வாலாஜா பேட்டை, இராணிப்பேட்டை, அணைக்கட்டு, ஆற்காடு, மங்களூர், மலையனூர், பாசர், வைத்யனாதபுரம், தாராபுரம், உடுமலை, தாயில்பட்டி, தஞ்சாவூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பெங்களூரு ஆகிய பகுதியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட சத்சங்க அன்பர்கள் பொதுமக்கள் துணையுடன் கடற்கரை, கோவில்கள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், தெருக்கள், சுடுகாடு, பள்ளிவளாகங்கள் போன்ற பொது இடங்களை தூய்மை செய்தனர். இந்தப் பிரசாரப் பணியினை அப்பகுதி செய்தி ஊடகங்களான செய்தித்தாள்கள், TV channelகள் பதிவு செய்து வெளியிட்டன. Clean up Day புகைப்படங்களை www.namadwaar.orgல் காணலாம்.



**கடலூரில் சத்சங்கம், 27 Oct 2016**





**கொடுங்கையூரில் மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை, 10 Nov 2016**



**கார்த்திகை ஏகாதசி, விட்டலாபுரம், 11 Nov 2016**



**துளசி கல்யாணம், ப்ருந்தாவன த்வாதசி, ப்ரேமிகபவனம், 12 Nov 2016**




ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம், மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கைங்கர்ய ஸபா சார்பில் சென்னை மேலமாம்பலம் அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில் Oct 25-31 நடைபெற்றது. 25 Oct செல்வி சாருலதா ப்ரதீப் - கோவர்த்தன லீலை உபன்யாஸமும், 26 Oct செல்வி அகிலா ஹரிஹரன் - ஸ்ரீமத் பாகவத மாஹாத்மியம் உபன்யாஸமும், 27 Oct சிரஞ்சீவி ஹரி ஆனந்த் - பீஷ்ம ஸ்துதி உபன்யாஸமும், 28 Oct செல்வி காயத்ரீ பத்மநாபன் - ஸுந்தர காண்டம் உபன்யாஸமும், 29 Oct செல்வி நந்திகா வெங்கட்ராமன், செல்வி தீபிகா வெங்கட்ராமன், சிரஞ்சீவி அஸ்வின் முரளி, சிரஞ்சீவி விஜய் பரத்வாஜ் - வாத்ய கச்சேரி - வயலின் - மிருதங்கமும் - கஞ்சிரா, 30 Oct செல்வி விசாகா சதீஷ் - மதுரகீதம் - ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்களும் நடைபெற்றன. பூர்த்தி நாள் 31 Oct ஐப்பசி ஸ்வாதி அன்று காலை ஸ்ரீ பம்மல் பாலாஜி தலைமையில் நகர ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. காலையில் ஹோமங்களும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் பாதுகா பூஜையும் நடைபெற்றன. மாலை மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனையும் ஈரோடு ஸ்ரீ பாலாஜி பாகவதரின் குரு மஹிமை உபன்யாஸமும் நடைபெற்றன.

## ஸ்ரீ ராமானுஜம்ஜியின் மஸ்கட் சத்சங்கங்கள், 7-20 Nov 2016





பக்த விஜயம் உபந்யாசம்

மதுர உத்சவம்



Youth Leadership Workshop





Anger Management Workshop



பூர்ணிமாஜியின் பாகவத சப்தாஹம் மற்றும் உபந்யாசம்
21-30 Oct வெலிங்டனில், 8 Nov சிட்னி நாமத்வாரின் ஆண்டுவிழா,
11-13 Nov க்ருஷ்ணாம்ருதம் உபந்யாசம் மெல்பர்னில்,
மற்றும் 20 Nov டாஸ்மானியாவில் சத்சங்கமும் நடைபெற்றது



ஸ்ரீ முரளி அவர்களின் மாணவ மாணவியருக்கான கூட்டு
பிரார்த்தனையில் உடுமலைபேட்டை, திருவொற்றியூர், அம்பை,
காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவில்பட்டி
வட்டாரங்களில், 56 பள்ளிகளில், சுமார் 31750 மாணவ மாணவிகள்
பங்கேற்றனர்.

**24-26 Nov மேட்டுகொளத்தூரில்**
**ஸ்ரீ பம்மல் பாலாஜி அவர்களின் சத்சங்கம்**






**22-30 Nov ஸ்ரீ ராமஸ்வாமி அவர்களின்**
**ஸ்ரீமத் ராமாயணம் உபன்யாசம், வத்தலகுண்டு**









**21-27 Nov குமாரி காயத்ரி, குமாரி பிரியங்கா,**
**ஸ்ரீமத் பாகவதம் உபன்யாசம், ஸ்ரீபெரும்புதூர்**





**13-19 Nov, கன்யா சகோதரிகளின்**
**ஸ்ரீமத் பாகவதம் உபன்யாசம், உடுமலைபேட்டை**

**ஸ்ரீ விஷ்ணுப்ரியாஜி**

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

## அப்ரமேயம்

'அப்ரமேயம்' என்ற சொல்லின் அர்த்தம் 'புரிந்து கொள்ள முடியாதது' என்பதாகும். ஆனால் அந்த அர்த்தத்தை புரிந்து கொள்ள முதலில் நாம் 'ப்ரமா' (प्रमा) என்ற ஸம்ஸ்க்ருத சோல்லிலிருந்து ஆரம்பித்து பார்ப்போம்.

"ப்ரமா" என்றால் RIGHT KNOWLEDGE அதாவது, எதை குறித்தாவது ஏற்படும் சரியான ஞானம் அல்லது அறிவு ஆகும். "ப்ரமம்" (भ्रम) என்ற வார்த்தை எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆனால் இந்த "ப்ரமா" என்பது முக்கியமாக சாஸ்த்திர விஷயங்களில் உபயோகப் படுத்த படுகின்ற ஒரு சொல். "ப்ரமம்" (ப்ரமை) என்பது "ப்ரமா" என்பதற்கு எதிர்மறையான அர்த்தம் கொண்ட ஒரு சொல், அதாவது தவறான அறிவு என்று அர்த்தம். அதனால்தான் ஒருவர் குழம்பி இருந்தால் "ப்ரமை" பிடித்தவன் போல் உள்ளான் என்கிறோம். भ्रम என்ற ஸம்ஸ்க்ருத சொல்லிற்கே அலைவது என்று அர்த்தம். மனது இங்கும் அங்கும் அலைந்து குழம்புவதால்தான் அதை "ப்ரமம்" என்கிறோம்.

இந்த "ப்ரமா" (प्रमा) என்பது சரியான, தெளிவான அறிவு. இதிலிருந்துதான் "ப்ரமாணம்" என்ற வார்த்தை ஏற்படுகின்றது. "ப்ரமா கரணம் ப்ரமாணம்", அதாவது "ப்ரமாவை" ஏற்படுத்துவது ப்ரமாணம். பரப்ரும்மத்தை பற்றிய சரியான ஞானத்தை ஏற்படுத்துவதால் வேதத்தை ப்ரமாணம் என்கிறோம். அதுபோல் இந்த உலகில் நாம் ப்ரத்யக்ஷமாக எதையெல்லாம் அறிந்து கொள்கிறோமோ, பார்த்தோ, கேட்டோ, நுகர்ந்தோ, சுவைத்தோ அல்லது ஸ்பரிசித்தோ, அதற்கெல்லாம் காரணமான கண், காது போன்ற இந்த்ரியங்களுக்கும ப்ரமாணம் என்று பெயர். நாம் பேச்சு வாக்கில் "நீ இதை கூறுவதற்கு என்ன ப்ரமாணம்" என்று கேட்கிறோம் அல்லவா - என்ன proof? என்று நாம் ஒன்றை 'சரி' என்று ஏற்றுக்கொண்டு நம்புவதற்கு அந்த proof காரணமாக இருப்பதால் அது ப்ரமாணமாகிறது. Authority என்ற அர்த்தத்திலும் உபயோகப் படுத்துகிறோம்.

அதே போல், 'ப்ரமேயம்' என்றால், இந்த ப்ரமா மூலமாக எதை தெரிந்து கொள்கிறோமோ, எதை பற்றிய அறிவு நமக்கு ஏற்படுகிறதோ, அதற்கு ப்ரமேயம் என்று பெயர். இதற்கு எதிர்மறையாக, 'அப்ரமேயம்' என்றால் தெரிந்துகொள்ள முடியாதது - அதாவது அறிவிற்கு அப்பார்பட்டது - என்று அர்த்தம். அதனால் பகவானுக்கே 'அப்ரமேயன்' என்று பெயர். 'அப்ரமேயன அடிசிதளசோதே....' என்று புரந்தரதாஸரும் பெங்களூர் அருகில் மல்லூர் என்ற ஊரில் உள்ள க்ருஷ்ணனை 'ஜகதோத்தாரண' கீர்த்தனத்தில் பாடுகின்றார்.

ஸ்ரீமத் பாகவதத்திலும் பல இடங்களில் பகவான் க்ருஷ்ணன் 'அப்ரமேயாத்மன்' என்று அழைக்கப்படுவதை பார்க்கலாம். மேலும் கண்ணன் சகடாசுரனை தன் பிஞ்சு காலால் உதைத்து வதம் செய்த போது, எல்லோரும் ஓடி வந்து கவிழ்ந்து கிடந்த சகடத்தை (வண்டியை) பார்த்து இது எவ்வாறு நடந்தது "என்று பேசிக்கோண்ட போது, அங்கிருந்த சிறுவர்கள், "கண்ணன் கால்களை உதைத்தான், அப்போது இந்த வண்டி கவிழ்ந்து விட்டது" என்று கூறினார்கள். அதை கேட்ட பெரியோர்கள் அதை நம்பவே இல்லை. அதற்கு ஸ்ரீ சுகர் சொல்கிறார் —

अप्रमेयं बलं तस्य बालकस्य न ते विदुः –

அதாவது அறிவிற்கு அப்பார்பட்ட பலம் அந்த குழந்தை கண்ணனுக்கு இருப்பதை அவர்கள் அறியவில்லை என்கிறார்.

இந்த பதத்திற்கு மற்றொரு கோணத்தில் ஒரு அர்த்தம் உண்டு. 'மா' என்றால் அளப்பது என்று அர்த்தம். அதிலிருந்து 'ப்ரமாணம்' என்ற சொல்லிற்கு "அளவு அதாவது measurement என்று அர்த்தம். விதுரர் பாகவதத்தில்,

तेषां संस्थां प्रभाणञ्च भूर्लोकस्य च वर्णय॥

**என்று ஸ்ரீ மைத்ரேயரிடம், "எல்லா லோகங்களுத்துடையவும் பூலோகத்துடையவும் அளவு மற்றும் அவைகள் இருக்கும் நிலையையும் கூறுங்கள்", என்று கேட்கிறார். அந்த அர்த்தத்தில் பார்த்தால், 'அப்ரமேயம்' என்றால் அளக்க முடியாதது என்று அர்த்தம். ஹிரண்யகசிபு பல உபாயங்களால் ப்ரஹ்லாதனை கொல்ல பார்த்தும் ஒன்றும் பலிக்காமல் போகவே, அவன்**

'अप्रमेयानुभावोयं अकुतश्चिद्भयोऽमरः'

**என்கிறான். இந்த பையன் அளக்க முடியாத மஹிமை கொண்டவனாக இருக்கிறானே! பயம் என்பதே இல்லை அவனுக்கு. சாகாமல் அமரனாக (தேவர்கள் போல்) இருக்கிறானே", என்று திகைக்கிறான்.**

अप्रमेयो ऋषीकेशः पद्मनाभोऽमरप्रभुः,

**என்ற விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் வரும் நாமத்தை இனி நாம் கூறும் பொழுது பகவானின் மேன்மையை இது நினைவூட்டுமல்லவா?**




நாம் எதைச் செய்வது என்பதை எப்படி தீர்மானிப்பது? சிறந்த ஓர் முடிவை, தக்க தருணத்தில் எடுக்கக்கூடிய ஆற்றலே, நம் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமையும். எந்த நேரத்திலும் சிறந்த முடிவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் கொண்ட ஓர் முறை மூலம் அமைத்துக் கொள்ளலாம்.

1

சூழ்நிலையைத் தெளிவாக ஆராய்ந்து, கவனிக்க வேண்டிய விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். அவை, மேலோட்டமானவையா? அல்லது கருத்தில் கொள்ள வேண்டிய ஆழமானவைகளா? எடுக்க இருக்கும் முடிவை சிறு சிறு முடிவுகளாக பிரிக்க முடியுமா என ஆராய வேண்டும். இவற்றை தீர்மானிக்கும் அவசரத்தில், நாமே பிரச்சனையில் மூழ்கி, நோக்கத்தில் கவனம் தவறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2

சற்றே விலகி நின்று புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். நம் முடிவுகள் எதிர்காலத்தை நோக்கி அமைந்ததாக இருக்க வேண்டும். நம் கடந்த காலம் ஓர் அனுபவமாக இருக்க வேண்டுமே தவிர நம்மை அது பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நல்ல ஒரு தலைவர், கடந்த கால அனுபவத்திலிருந்து நன்மை, தீமை இரண்டையுமே கற்பவராக இருப்பார். பிறரை சேர்த்து கலந்தாலோசிப்பதால், புதிய ஆலோசனைகளும் கருத்துகளும் கண்ணோட்டமும் கிடைக்கும். ஆனால், மற்றவர்களை சேர்த்துக்கொள்ள முடிவு செய்வோமெனில், அவர்களுடைய பங்கிலும், ஈடுபாட்டின்அளவிலும் தெளிவு இருக்க வேண்டும்.



# சரியாக தீர்மானித்தல்

3

பற்பல சாத்தியமான மாற்று வழிகளை ஆலோசித்து அறிய வேண்டும். குறைந்தது ஐந்து வெவ்வேறு முறைகளை சிந்திக்க வேண்டும். புதிதான வித்யாசமான வழிகளை கண்டறிய வேண்டும். பொருத்தமற்றது என்றெண்ணி உடனடியாக விலக்கி விட கூடாது. வழக்கத்திற்கு மாறான எண்ணங்கள் சில நேரங்களில் சிறந்த தீர்வாக அமையலாம்.

4

தேர்ந்தெடுக்கும் முன், பின்வருபவைகளை கருத்தில் கொள்ள வேண்டும். சாதகமானவை எவை? சாதகமற்றவை எவை? யாரை/எதை பாதிக்கும்? சாதிக்கக்கூடியதா? நம்முடைய நீண்ட கால இலக்குகளுடன் பொருந்துமா?

5

எதுவுமே, ஏற்றமற்றதாகவும் ஒப்புக்கொள்ள இயலாததாகவும் இருக்கையில், சிலர் அதில் சிக்கிக் கொண்டு விடுகின்றனர். இந்த ஆய்விலிருந்து தற்பொழுது நாம் எதை தேர்ந்தெடுக்க இயலும் என்பதை அறிய வேண்டும். எதிலும் விட்டுக்கொடுக்கவேண்டிய சில அம்சங்கள் உள்ளது என்பதை உணர வேண்டும். எந்த ஒரு முடிவும் எப்பொழுதுமே குறைகளற்றதாக இருக்காது.

6

செயல்முறைகளும், எடுத்த முடிவை செயல்படுத்த ஏற்ற அவசியமான பங்களிப்பாளர்களும் கருவி முதலியவைகளும் ஒவ்வொரு செயலுக்கான காலகட்டமும், கொண்ட ஓர் செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும். நமக்கு கிடைக்கவிருக்கும் வெற்றி என்பதையும் இப்போதே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். எத்தகைய பலன்கள் எதிர்பார்க்கிறோம் என்பதையும் திட்டவட்டமாக தெரிந்து கொண்டு அதற்கான சிறு சிறு இலக்குகளையும் முடிவு செய்ய வேண்டும். எடுத்த முடிவுகளை மீண்டும் ஆய்வு செய்யவேண்டிய நேரத்தையும் கண்டறிந்து தேவைப்பட்டால் இடையில் செய்ய வேண்டிய திருத்தங்களையும் செய்ய வேண்டும்.

7

நாம் எடுத்த முடிவுகளையம், எதிர்பார்க்கும் விளைவுகளையும், இந்த முடிவினால் பாதிக்கப்படும் அனைவரிடமும் தெரிவிக்கவும். நமக்கும், பிறருக்குமான தெளிவான எதிர்பார்ப்புகளை நிர்ணயிக்க வேண்டும். நாம் எடுத்த தீர்மானங்கள் தெளிவானதாகவும், திருப்திகரமாகவும், சுருக்கமானதாகவும் இருக்க வேண்டும்.

8

முடிவுகளை செயற்படுத்துவதில் கவனத்துடன் இருக்க வேண்டும். செயல்படுத்த ஆரம்பித்தப்பின், இடையில் வரும் மாற்றங்களினால் ஏற்படும் பதட்டமும் பணியின் ஓர் பகுதிதான் என்பதை அறிந்துகொள்ளவும். இதனால், தவறான ஓர் முடிவை எடுத்துவிட்டோம் என்பதல்ல. மாற்றம் கடினமானது என்பதே ஆகும்.

# புராநவா




நிகோபார் தீவில் காணப்படும் இந்த பழத்தின் விதையை எவ்வாறு அழைக்கிறோம்?

(விடை அடுத்த இதழில்)

<u>சென்ற மாத புராநவா பதில்</u>

CERN (Centre for Nuclear Research) Geneva, Switzerland

Annual Student Mass Prayer at Chennai for students appearing for board exams will take place at Kamarajar Arangam, Teynampet on 21st January 2017. A motivational talk by Sri Ramanujamji and Dr Bhagyanathanji will be followed by Mahamantra prayer.
For details contact Namadwaar Office.




மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் பகவத் கீதையில் பக்தி யோகம் பற்றி பேசியதை ஸ்ரீ M.K.ராமானுஜம்ஜி அவர்கள் தொகுத்து ஒரு புத்தக வடிவில் கொண்டு வந்துள்ளார். விலை ரூ 80/-




**MADHURASMARANAM - My Guru As I See Him,** ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் திவ்ய சரித்திரத்தை, ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர், Dr ஆ பாக்யநாதன்ஜி அவர்கள் 10 Oct 2016 அன்று சென்னையில் நிகழ்த்திய தமிழ் உரை DVD வடிவத்தில். இதன் விலை Rs 100/-

**கிடைக்கும் இடம்: மதுரம் ஸ்டோர்ஸ், Plot No 11, Door No 4/11, Nethaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 600083 Ph: 9442613710**

On the auspicious occasion of the Jayanthi Utsav of Sri Sri Swamiji, a refreshed version of the webpage www.namadwaar.org was launched with interactive and lively features which include an online radio NAMADWAAR'S WEB VOICE.
Tune in to be in satsanga all through your day!

பாலாஜி ராமசந்திரன்

# பாரம்பரிய பொக்கிஷங்கள்

# உயிரியல் உண்மைகள் -1

தற்கால அறிவியலில் தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு அறிவியல் பூர்வமான பெயர்கள் இருப்பதையும், அவைகள் மரபணு தொடர்பாகவும் மேலும் பல முறைகளிலும் வகைப்படுத்தப் பட்டுள்ளதையும் நாம் அனைவரும் அறிவோம்! வியத்தகு வகையில், நம்முடைய சனாதனமான பாரத பாரம்பரியத்தில் அனாதிகாலமாய் நாம் உயிரினங்களை நன்கு போற்றி, அவற்றை கூர்ந்து நோக்கி ஆராய்ந்து, அவற்றைப் பல வகைகளிலும் வகைபடுத்தி, அவற்றின் குணாதிசயங்கள், பயன்கள் ஆகியவற்றை பதிவு செய்தே வந்துள்ளோம்!

வேத மந்திரங்கள், உபநிடதங்கள், சூத்திரங்கள் மற்றும் இவற்றிற்கான உரை நூல்களை கூர்ந்து நோக்கி ஆராயும்போது, அதில் ஏராளமான தாவர வகைகள் மற்றும் விலங்குகளைப் பற்றிய குறிப்பு வருவதிலிருந்து, நம் முன்னோர் உயிரியல் பற்றியதான அறிவில் சிறந்து விளங்கினர் என்று தெரிய வருகின்றது அல்லவா? தற்போதைய ஆராய்ச்சிகள் அவற்றை மெய்ப்பிக்கத்தானே செய்கின்றதன்றி, மறுப்பதாக இல்லை. இதிலும் வேதங்களில் காணப்படுபவை இறுதியான உண்மையாக இருப்பதும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

ரிக் வேதத்தில், மரங்களின் வகைகள், விதை விதைப்பது, குறிப்பிட்ட காலங்களில் விலங்குகளின் செயலற்றதன்மை(hibernation), பதபடுத்தப்பட்ட தேக்கு மரம், விலங்குகளைப் பழக்குதல், சோளத்தை அரைத்தல், பறவைகள் மற்றும் பறவை இறகுகள், உழவு செய்வதின் வாயிலாக உணவுப் பொருள் உற்பத்தி போன்றவற்றின் தகவல்கள் மற்றும் குறிப்புகள், மரங்களை பற்றி குறிப்புகள், இவை மட்டுமல்லாமல், இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி, தாவரங்கள் மற்றும் அவற்றின் மருத்துவ குணம் தாவரவகைகளின் பயன்பாடு)

ஆகியனவற்றைப் பற்றி எடுத்து சொல்லப்படுவதை பார்க்க முடிகின்றது. இவை அனைத்தும் இறுதியான ஆராய்ச்சி முடிவுகளை ஒத்த வண்ணமாகவே அமையும் என்பதிலும் ஐயம் தேவை இல்லை.

அதர்வன வேதமானது சக்தி/ஆற்றல், விதையின் பயன்கள், நெல், எள், தயிர், தாவர உணவுகள் ஆகியன பற்றி உள்ளது. 'சதபத பிராமணம்' என்கின்ற உரைநடை நூலில், உழவிற்கு பயன்படும் கலப்பையின் வகைகள், உடைகளுக்கு சாயம் ஏற்றுதல், பசுஞ்சாணத்தை உரமாக பயன்படுத்துதல், பூச்சிகள் மற்றும் களைகள், மரவீடுகள், மூங்கில் மற்றும் புற்களைக் கொண்டு வேய்தல் போன்றவற்றின் குறிப்புகள் உள்ளதை பார்க்க முடிகிறது.

ஐந்தாம் வேதமென சொல்லப்படும் அண்மைக்கால மகாபாரதத்தின் சாந்தி பர்வத்தில், ஏராளமான அறிவியல் விஷயங்கள் உள்ளதை பார்க்க முடிகின்றது. வேர்கள் மண்ணிலிருந்து தனக்குத் தேவையான உணவினை எப்படி கிரகித்து செரிக்கச் செய்கின்றன, வளமான மற்றும் தரிசு நிலத்தன்மை நிலத்தின் வேறுபாடுகள், மரங்களைப் பற்றிய குறிப்பு, நடவு முறைகள், நாற்று நடுதல், தாவர ஒட்டு முறை, உர வகைகள், உழவில் மறு சுழற்சி முறை, மகரந்த சேர்க்கை, தாவரங்களுக்கு பெயரிடும் முறை, உறைவிடம் மேலும் பலவற்றைப் பற்றிய குறிப்பானது வராஹ மிஹிரா, சங்கர மிஷ்ரா, குணரத்னா மற்றும் உதயணா ஆகியவர்கள் அருளிய ப்ருஹத் சம்ஹிதை மற்றும் புராணங்களில் உள்ளது.

உபநிஷத் மற்றும் சூத்திரங்களில், ஆடைகளானவை சில வகையான மலர்களின் சாறிலிருந்து சாயமேற்றப்பட்டதாகவும், தலை திருத்துவதற்கான சீப்பானது எப்படி தயாரிக்கப்படுவதாகவும், வாசனைத் திரவியங்கள் சந்தனத்திலிருந்து பெறப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளன. கால்நடைகளைக் கொண்டு சடங்குகள் நடத்தப்பட்டதிலிருந்து அவை மிகவும் மதிக்கப்பட்டன என்பது தெரியவருகின்றது. தாவரங்களின் வாழ்க்கையைப் பற்றியதான அறிவு, பஞ்ச பூதங்கள் மற்றும் அவை உருவான விதமும் அவற்றில் விளக்கப்பட்டிருகின்றது.

# சைதன்ய மஹாப்ரபு - விஸ்வரூபனுடைய அவதாரம்

ஜகந்நாத மிஸ்ரர்ருக்கும் சசி தேவிக்கும் திருமணம் முடிந்து பல வருடங்கள் கடந்து விட்டன. பிறந்த குழந்தைகள் எல்லாம் இறந்தே பிறந்தன. ஆதலால், அவர்கள் வாழ்க்கை சோகம் நிறைந்ததாகவே இருந்தது.




அவர்களுக்குப் புத்திர பாக்கியம் இல்லாததால் மனச்சோர்வு அடைந்த ஜகந்நாத மிஸ்ரர் தனது ஆசிரியர் பணியில் கவனம் செலுத்த இயலவில்லை. அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்று சாதாரண வாழ்க்கை வாழ முடிவு செய்தார்.





ஆசிரியர் பணியை துறந்தவுடன் ஜகந்நாத மிஸ்ரர் ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்தார். அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வைதீக காரியங்களை செய்து வந்தார்.



ஒரு நாள் தனது வேலை நிமித்தமாக வெளியே செல்லும் பொழுது கங்கை கரையோரம் அத்வைதாசார்யாரை சந்தித்தார்.




ஓவியர் : பாலமுரளி




தான் கூறினபடியே அத்வைதாசாரியார் ஜகந்நாதர் வீட்டிற்குச் சென்றார். அவரும், அவருடைய மனைவி சசி தேவியும் மிகுந்த பக்தியுடன் சேவைப் புரிந்தனர்.



சேவையினால் பிரசன்னமான அத்வைதாசாரியார் அவர்களை ஆசீர்வதித்தார்.




அவர் ஆசிர்வதித்தபடியே சசி தேவி ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.




ஜகந்நாத மிஸ்ரரும் சசி தேவியும் அவர்களின் குழந்தைக்கு "விஸ்வரூபன்" என்று பெயர் சூட்டினர்.

**விஸ்வரூபன் என்பவர் சைதன்ய மஹாப்ரபுவின் அண்ணன் ஆவார்!!**

# பழத்ததில் பிடித்தது

**செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு** (தமிழாக்கம் செய்யப்பட்டவை)

## From Palm Leaves to Computers - ancient medical scripts turn digital

October 30, 2016
ECONOMIC TIMES

பெருமை வாய்ந்த Foundation for Revitalisation of Local Health Traditions Trustஆல் (FRLHT) நடத்தப்படும், பெங்களூருவில் அமைந்துள்ள Trans Disciplinary University (TDU)யில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்களின் பத்துவருட முயற்சியினால், பனை ஓலைகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட, ஆயிரக்கணக்கான புராதன மருத்துவ கையெழுத்துப்பிரதிகள் மின்னணு முறையில் (Digitalized) மாற்றப்பட்டுள்ளது. அதன் பயனாக, அவை எளிதில் அனைவருக்கும் கிடைக்கும்படி ஆகியிருக்கின்றது. இதுவரை 10,000க்கும் மேற்பட்ட பிரதிகள் மின்னணு முறையில் மாற்றப்பட்டு முறையாகப் பட்டியலிடப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு அர்பணித்துள்ளனர். 2006ல் FRLHT ஏற்பாடு செய்யப்பட்டு, National Mission for Manuscripts நடத்திய கருத்தரங்கில், இந்தியாவின் மருத்துவ கையெழுத்துப்பிரதிகளை பட்டியலிடும் எண்ணம் பிறந்தது. TDUவின் துணை வேந்தர் உயர்திரு தர்ஷன் ஷங்கர் பேசுகையில், "ஏறக்குறைய ஒரு லட்சம் மருத்துவ கையெழுத்துப்பிரதிகள் உள்ளன. ஆனால், ஒருவருக்கும் இந்த உண்மை தெரியாது. அவை இந்தியாவிலும் அதை சுற்றி உள்ள நாடுகளில் மட்டுமல்லாமல், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில், பொது மற்றும் தனியார் தொகுப்புகளாகக் கிடக்கின்றன" என்று கூறினார். “மின்னணு மயமாக்கப்பட்ட இந்த கையெழுத்துப் பிரதிகளை நிர்வகிக்கும் அமைப்பானது, இந்தியாவில் பரவலாகக் காணப்படும் பனை ஓலைகள், காகிதம் அல்லது பூச்ச மரப்பட்டை (Birch bark) இவற்றில் எழுதப்பட்ட உரைகளை எளிதில் அனைவரும் அடைய வகைசெய்கின்றது” என்று அவர் மேலும் கூறினார்.

(திரு தர்ஷன் ஷங்கர் நமது பாரம்பரிய பொக்கிஷங்கள் பொன்விழாவில் கல்ந்துகொண்டு அற்புதமாக சிறப்புரை ஆற்றினார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.)

## Mattur Village of Karnataka portrays a perfect example of Indian culture

November 23, 2016

ohmyindia.com

**மனித வாழ்க்கைக்கு நன்மை பயக்கும் பல பழமையான பண்பாடுகளைப் பின்பற்ற எக்காலத்திலும் பொருந்தக்கூடிய புதுமையான வழிகளைக் கொண்டது நமது பாரதக் கலாச்சாரம். பழமையான நமது கலாச்சாரத்தின் வேர்களைப் பிடித்துக்கொண்டே நவீனத்தில் உள்ள நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்பவர்கள், விருந்தோம்பலுக்கும், தார்மீக நம்பிக்கைகளுக்கும் பேர் போன நமது பாரத நாட்டைச் சேர்ந்தவர்கள்.. பல கலாச்சாரங்களின் கலவையாக இந்தியர்களின் வாழ்க்கை மாறிப்போயிருக்கும்போதும், வேதமே இந்தியாவின் ஆணிவேராக இன்றும் இருந்துவருகிறது.**

**இத்தன்மையை கர்நாடகாவிலுள்ள மாத்தூர் என்ற கிராமம் எள்ளளவும் மாறாமல் பிரதிபலிக்கிறது. கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கணினிப் பொறியியல் வல்லுநர் இருந்தபோதிலும், கிராமத்தின் பேச்சு வழக்கு மொழியாகத் திகழ்வது ஸம்ஸ்க்ருதமே ஆகும். மாத்தூரின் எந்த வீட்டினுள் நுழைந்தாலும் "கதம் அஸ்தி?(எப்படி இருக்கிறீர்கள்?), பவத: நாம கிம்? (தங்கள் பெயர் என்ன?"), காபி வா சாயம் இச்சதி பவான்? (காபி அல்லது டீ ஏதாவது குடிக்கிறீர்களா?) என்று அழகான ஸம்ஸ்க்ருதத்தில் உபசரிப்புகளை ஆனந்திக்கலாம்.**

**கர்நாடகாவின் ஷிமோகா மாவட்டத்தில் வற்றாத ஜீவநதியான துங்கபத்ராவின் அழகிய கரையில் அமைந்துள்ளது இந்தச் சின்னஞ்சிறிய கிராமம். உலகின் மிகப் பழமையான மொழியான ஸம்ஸ்க்ருதம் தனது நறுமணத்தை வீசிக்கொண்டு இந்த கிராமத்தில் மிக அழகாக மலர்ந்திருக்கிறது. கிராமத்தில் வசிக்கும் மக்கள் பழமையான வேத கலாச்சாரத்தை பின்பற்றுவதோடு, நிறைய ஸம்ஸ்க்ருத ஸ்லோகங்களைப் பாடுகிறார்கள்; ஸம்ஸ்க்ருதத்திலேயே பேசவும் செய்கிறார்கள். நம்மை மிகவும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தும் விஷயம் என்னவென்றால், அவர்களது தாய் மொழியாக ஸம்ஸ்க்ருததையே வைத்துக் கொண்டுள்ளனர் என்பதுதான்.**

**கிராமத்துப் பள்ளிகளில் வேதம் பாடமாக கற்பிக்கப்படுகிறது. ஐந்து வருடங்கள் கட்டாயப்பாடமாக ஒவ்வொரு குழந்தைக்கும் வேதபாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. அதை அவ்வப்போது கிராமத்தின் பெரியவர்கள் கவனமாக கண்காணித்து வருகின்றனர். மேற்கண்ட சிறப்பம்சங்களால் மாத்தூர், ஒரு தனித்துவம்**

வாய்ந்த கிராமமாகத் திகழ்வதால், வெளிநாட்டிலிருந்து நிறைய மாணவர்கள் வந்து தங்கி ஸம்ஸ்க்ருதமும் வேதமும் கற்றுக்கொண்டு செல்கின்றனர்.

ஒருவரது கல்வித்திறனையும், சிந்தனா சக்தியையும் மேம்படுத்துவதில் ஸம்ஸ்க்ருத்திற்குப் பெரிய பங்கு உண்டு என்று நம்பப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் நன்கு தேர்ச்சியுற்ற ஒரு பொறியாளர் இருப்பது இந்த விஷயத்தை மேலும் உறுதி செய்கிறது. இந்த கிராமத்தில் உருவான முப்பதுக்கும் மேற்பட்ட ஸம்ஸ்க்ருத பேராசிரியர்கள் இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளிலும் தங்களது பணியை சிறப்பாக ஆற்றிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதத்தின் கலாச்சாரமும் பண்பாடும் இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் தாண்டினாலும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

# சனாதன புதிர் 91

## ஆத்ரேயன்

1. பிப்பலாத மஹரிஷியை எந்த அறுவர் எதற்காக அணுகினர்?
2. எல்லாம் பிரம்மமே, இந்த ஆத்மாவும் பிரம்மமே - இந்த வாக்யம் எங்கு காணப்படுகிறது?
3. வாய்மையே வெல்லும். பொய்மை அல்ல. இங்கு சத்தியம் என அறியப்படுவது எது? இது எங்கே காணப்படுகிறது?
4. வேதாந்தத்தின் பிரகாரம் பிராம்மணன் என்பவன் யார்?
5. சத்தியத்தை சொல், தர்மத்தை செய், ஸ்வாத்யாயத்தினின்று நழுவிவிடாதே - இந்த உபதேசம் எங்கே காணப்படுகிறது? என்ன அர்த்தம்?
6. அஹம் ப்ரஹ்மாஸ்மி! தஸ்மாத் தத் ஸர்வமபவத்!! இந்த மஹாவாக்யம் எங்கே காணப்படுகிறது? அர்த்தம் என்ன?
7. செல்வத்தினால் மனிதனை திருப்திப்படுத்த முடியாது. இந்த உபநிஷத் வாக்யம் எங்கே காணப்படுகிறது?
8. எழுந்திரு, விழித்து கொள், சத்குருவை அணுகி ஆத்மாவை அறியுங்கள் - எந்த உபநிஷத் இப்படி சொல்கிறது?
9. இஷ்டாபூர்த்தகர்மங்களை பெரிதாக நினைத்து ஆத்ம தத்துவத்தை அறியாதவர்கள் ப்ரமூடர்கள். இந்த வாக்யம் எங்கே காணப்படுகிறது? இஷ்டம், பூர்த்தம் என்றால் என்ன?
10. ஸத்யஸ்ய ஸத்யம் அப்படி என்றால் என்ன? இந்த வாக்யம் எங்கே காணப்படுகிறது?

## சனாதன புதிர் பதில்கள்

1. பாரத்வாஜனின் மகன் ஸுகேசன்; சிபியின் பிள்ளை சத்யகாமன்; ஸௌர்யனின் புதல்வன் கார்க்கியன்; அச்வலனின் பிள்ளை கௌசல்யன்; ப்ருகுவின் மகன் வைதர்பி; காத்யாயனின் மகன் கபந்தி; பிரம்ம வித்யையை அறிய அணுகினர்; (ப்ரச்னோபநிஷத்).
2. மாண்டூக்யோபநிஷத்தில்.
3. முண்டகோபநிஷத் 3.1.6 பரப்பிரம்மத்தை சத்தியம் என்று சொல்கிறார்கள்.
4. பிரம்ம ஞானி மட்டும் ப்ராம்மணன் என்று அறியப்படுகிறான். ப்ரஹ்ம ஜானாதி இதி ப்ராஹ்மண: ப்ரஹதாரண்யகோபநிஷத் (3.8.10)
5. தைத்திரீயோபநிஷத் (1-11) சத்யவசனம், தர்ம ஆசரணை, ஸ்வாத்தியாயானுஷ்டானம், (வேத மந்திரங்களை பாராயணம் செய்தல்) - இந்த மூன்றையும் அனுஷ்டானம் செய்தல்.
6. ப்ரஹதாரண்யகோபநிஷத் (1.4.10) ஜீவப்ரம்ம ஐக்யத்தை உபதேசிக்கிறது.
7. காடகோபநிஷத் (1.1.27) ந வித்தேன தர்பணீயோ மனுஷ்ய:
8. உத்திஷ்டத, ஜாக்ரத, ப்ராப்ய வரான் நிபோரத! காடகோபநிஷத்(1-3-14); எழுந்திருங்கள்; விழிப்புடன் இருங்கள்; ப்ரும்ம நிஷ்டரான குருவை அணுகி உபதேசத்தை பெறுங்கள்; ஆத்ம சொரூபத்தை அறிந்து முக்தராகுங்கள்.
9. முண்டகோபநிஷத் (1.2.10) இஷ்டம் - ச்ரௌத கர்மாக்கள், அக்னிஹோத்ரம், தவம், சத்யம், வேதாத்யயனம், அதிதி சத்காரம், வைச்வதேவம் முதலியன - பூர்த்தம் - கிணறு, குளம், ஏரி வெட்டுவது, தோட்டம் அமைப்பது, கோயில் கட்டுவது, அன்னதானம் செய்வது, இவைகள் முக்தியை தராது.
10. ஆத்மாவின் இரகசியமான பெயர் ப்ரஹதாரண்யகோபநிஷத் (2.1.20) ப்ராணாவை சத்யம், தேஷாமேவ சத்யம்.

Dr. Shriraam Mahadevan

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256

ENDOCRINE AND SPECIALITY CLINIC

New 27/1, Old 11/1, (Gr. Floor), 4th Cross Street, RK Nagar,

Mandaveli, Chennai -600028

(Next to Krishnamachari Yogamandiram)

Tel: 2495 0090, Mob: 9445880090

E-mail: mshriraam@gmaill.com, www.chennaiendocrine.com

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 10 December 2016 | ஏகாதசி |
| 12 December 2016 | கொடுங்கையூர் சத்சங்கம் |
| 14,15 December 2016 | மதுரை சத்சங்கம் |
| 25 December 2016 | ஏகாதசி |
| 29 December 2016 | ஹனுமத் ஜயந்தி |
| 01 January 2017 | மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை |
| 7-15 January 2017 | ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசம், நாரத கான சபா, சென்னை |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:
helpdesk@madhuramurali.org
Ph: "24895875"
SMS '9790707830'

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org


- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


மதுரமுரளி







ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி உலகெங்கிலும் அன்பர்கள் பல்வேறு சமூகநல தொண்டுகளில் பங்குகொண்டனர்.

தஞ்சாவூரில் பார்வையற்றோருக்கான அரசு பள்ளியில் 165 மாணாக்கர்களுக்கு மதிய உணவு, அரசு காது கேளாதோர், பேசமுடியாதோர் பள்ளியில் 135 பேருக்கு மதிய உணவு, அரசு ஆதரவற்றோர் பள்ளியில் 115 பேருக்கு இரவு உணவு, முதியோர் இல்லத்தில் 25 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

ஆய்குடியில் அமர் சேவா சங்கத்தில் அம்பை மற்றும் திருநெல்வேலி காட் சங்கத்தினரால் அன்னதானம் செய்யப்பட்டது

கடலூரில் Saint Joseph School alumni சார்பில் Helpage India இல்லத்தில் உணவு வழங்கப்பட்டது.

உடுமலையில் Gandhi Residential Schoolல் அன்னதானம் செய்யப்பட்டது.

**மதுரமுரளி அச்சுக்கு செல்லும் வரை கிடைத்த நிகழ்ச்சி விவரங்களை மட்டுமே இங்கு தொகுத்துள்ளோம். உலகெங்கிலும் இன்னும் பல இடங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி சமூக நலத்தொண்டுகள் பக்தர்களால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.**

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17
Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar